# விலைமனுக்களுக்கான அழைப்பு

## கடற்றொழில் அமைச்சு

## வட மாகாணத்தினுள் கடற்றொழிலை அபிவிருத்தி செய்தல் மன்னார் மாவட்டம் – படிநிலை – 1

**ஒப்பந்த இல.: MF/SD/PROC/PROC/09/2024/06**

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள அண்ணளவாக 97 மில்லியன் ரூபா (மொத்த மதிப்பீட்டுக் கிரயம்) மதிப்பீட்டுக் கிரயத்தைக் கொண்ட வட மாகாணத்தினுள் கடற்றொழிலை அபிவிருத்தி செய்தல் - மன்னார் மாவட்டம் - படிநிலை -1 எனும் பணிக்காக தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை கடற்றொழில் அமைச்சின் சார்பாக அமைச்சுப் பெறுகைக் குழுத் (MPC) தலைவர் அழைக்கின்றார்.

   செயற்றிட்ட அமைவிடம் : மன்னார் மாவட்டம்

   செயற்றிட்ட விளக்கம் :

   தரப்பட்டுள்ள அளவுப் பத்திரம் (BOQ), வரைபடம் மற்றும் விபரக்குறிப்புகளின் பிரகாரம் குளக் கால்வாயை தூர்வாருதல், கொங்கிறீட் வீதிகள், மக்காடம் வீதி, ஹியூம் குழாய் மதகுகள் மற்றும் கிரவல் வீதிகளை பூர்த்தி செய்தல் என்பன இந்த வேலையில் உள்ளடங்குகின்றன. நிர்மாணக் காலம் தொண்ணூறு (90) நாட்காட்டி நாட்களாகும்.

2. விலைக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

3. ஒப்பந்தத்தை கையளிக்கப் பெறுவதற்கு சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் (முன்னைய ICTAD) தற்போதைய நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) கீழ் தூர்வாருதல் மற்றும் காணிசீரமைத்தல் / பெருந்தெருக்கள் நிர்மாணம் மற்றும் கடல்வழி நிர்மாணத் துறையில் C4 அல்லது மேற்பட்ட தரத்தில் செல்லுபடியாகும் பதிவைக் கொண்டவராகவிருத்தல் வேண்டும்.

4. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகைமைத் தேவைப்படுத்தல்கள் பின்வருமாறு :
   - இறுதி திகதிக்கு முந்தைய ஏழு (07) வருடங்களில் செய்துள்ள நிர்மாண வேலையின் வருடாந்த சராசரி நிதிப்புரள்வானது ஆகக் குறைந்தது 146 மில்லியன் ரூபாவாகவிருத்தல் வேண்டும்.
   - கடந்த ஏழு (07) வருடங்களில் நிகரான தன்மை மற்றும் சிக்கல் தன்மையுள்ளதும் மூன்று (03) மாதங்களில் பூர்த்தி செய்யப்பட்டதும் ஆகக் குறைந்தது 67 மில்லியன் ரூபா பெறுமதியுள்ள ஆகக் குறைந்தது ஒரு செயற்றிட்டத்தை பிரதான ஒப்பந்தக்காரராக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
   - மூன்று மாதங்களுக்கான பண உள்ளீடுகளுக்கான ஆவணச் சான்றுகள் சகிதம் இந்த ஒப்பந்தத்திற்காக மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு முற்பணக்கொடுப்பனவு நீங்கலாக ஏனைய ஒப்பந்த ரீதியிலான கடப்பாடுகளை பூர்த்தி செய்த பின்னருள்ள ஆகக் குறைந்த திரவச் சொத்துக்கள் மற்றும்/அல்லது கடன் வசதிகளின் ஆகக் குறைந்த தொகை 76 மில்லியன் ரூபாவிற்கு குறையாமலிருத்தல் வேண்டும்.
   - விலைமனுதாரர் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8ஆம் பிரிவின் பிரகாரம் பொது ஒப்பந்த கம்பனிகள் பதிவாளரினால் வழங்கப்பட்ட (PCA 3) செல்லுபடியாகும் சான்றிதழைக் கொண்டிருத்தல் வேண்டும். இது ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகுதியாகவிருக்கும்.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கொழும்பு-10, மாளிகாவத்த, புதிய செயலகம், 7ஆம் மாடியிலுள்ள கடற்றொழில் அமைச்சின் உதவிப் பணிப்பாளரிடம் (சமூக அபிவிருத்தி) பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 2024 மே 07ஆம் திகதி முதல் 2024 மே 27ஆம் திகதி வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையும் அதே முகவரியில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம். தொடர்பிலக்கங்கள்: தொலைபேசி: 0112440579, கைப்பேசி: 0717440862, தொலைநகல்: 0112322416, மின்னஞ்சல் முகவரி: social@fisheries.gov.lk

6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024 மே 07ஆம் திகதி முதல் 2024 மே 27ஆம் திகதி வரை கடற்றொழில் அமைச்சின் 07ஆம் மாடியில் அமைந்துள்ள அபிவிருத்திப் பிரிவிற்கு மீளளிக்கப்படாத கட்டணமான பன்னிரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவைச் (ரூபா 12,500.00) செலுத்திய பின்னர் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை கொழும்பு-10, மாளிகாவத்த, புதிய செயலகம், கடற்றொழில் அமைச்சு, செயலாளருக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவு முறை ரொக்கப் பணம் அல்லது வங்கி வரைவாக இருத்தல் வேண்டும்.

7. விலைமனுக்களை செயலாளர், கடற்றொழில் அமைச்சு, புதிய செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு-10 என முகவரியிட்டு 2024 மே 28ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் கடற்றொழில் அமைச்சின் 07ஆம் மாடியில் அமைந்துள்ள அபிவிருத்திப் பிரிவிற்கு ஒப்படைத்தல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் உடன் திறக்கப்படும்.

8. விலைமனுக்கள் 2024 ஆகஸ்ட் 27ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். (91 நாட்கள்)

9. சகல விலைமனுக்களுடனும் ஒன்பது இலட்சத்து எழுபதாயிரம் ரூபா (ரூபா 970,000.00) பெறுமதியுள்ள படிவத்தின் உள்ள 9ஆம் பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ள நிலையான படிவத்தில் (விலைக்கோரல் பிணை முறி) கொழும்பு-10, மாளிகாவத்த, புதிய செயலகம், கடற்றொழில் அமைச்சு, செயலாளரின் பெயருக்கு வரையப்பட்ட விலைக்கோரல் பிணைமுறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன் விலைக்கோரல் பிணைமுறி 2024 செப்டெம்பர் 24ஆம் திகதிவரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறியானது இலங்கையினுள் செயற்படும் இலங்கை மத்திய வங்கியின் கீழ் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றில் பெறப்பட்டதாகவிருத்தல் வேண்டும்.

10. முன்கூட்டிய தள விஜயம் 2024 மே 17ஆம் திகதி இடம்பெறும்.

11. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் பின்வருமாறு இடம்பெறும்.

    திகதி மற்றும் நேரம்: 2024 மே 20ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு

    இடம்: கேட்போர் கூடம்,<br>5ஆம் மாடி, கடற்றொழில் அமைச்சு,<br>புதிய செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு-10.

12. முரண்பாடுகளைத் தவிர்த்துக் கொள்வதற்கு விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு முன் ITB of ICTAD/SBD/01 இரண்டாம் பதிப்பு - ஜனவரி 2007 மற்றும் 2009 ஒக்டோபர் மற்றும் 2011 பெப்ரவரி வழங்கப்பட்ட இணைப்புகளை கவனமாக வாசிக்குமாறு சகல விலைமனுதாரர்களும் தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**<br>**அமைச்சுப் பெறுகைக் குழு,**<br>**வட மாகாணத்தினுள் கடற்றொழிலை அபிவிருத்தி செய்தல்,**<br>**கடற்றொழில் அமைச்சு,**<br>**2ஆம் மாடி,**<br>**புதிய செயலகம்,**<br>**மாளிகாவத்தை,**<br>**கொழும்பு-10.**